ஆரம்பக்கல்வி



கணிதம்

பிரசினம் தீர்த்தல்

2010 – 2020 வரையான புலமைப்பரிசில் இறுதிப் பரீட்சை வினாத்தொகுப்பு

ஆக்கம்
R.நிரோஜ்

www.lkgod.lk

01. ஒரு வகுப்பறையில் 2 கதிரைகள் வீதம் உள்ள 12 நிரைகளும் 3 கதிரைகள் வீதம் உள்ள 6 நிரைகளும் உள்ளன. அந்நிரைகளில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

.....

02. 600 இனிப்புகளில் 60 ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பைக்கற்றில் 5 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுகளாகப் பொதி செய்யப்பட்டன.

1. சிறிய பைக்கற்றுகளில் பொதி செய்யப்பட்ட இனிப்புகளின் மொத்த எண்ணிக்கை யாது?

   .....

2. அத்தகைய எத்தனை சிறிய இனிப்புப் பைக்கற்றுகளைத் தயார் செய்யலாம்?

   .....

03. 1500 ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900 ml நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 900 ml நீரைக் கவனமாக ஊற்றும்போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது?

.....

04. 100 cm நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 15 cm நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5 cm வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?

.....

05. மூன்று நண்பர்கள் ஆளுக்கு ரூபா 200.00 வீதம் செலுத்திச் சேர்த்த பணத்தில் ரூபா 285.00 இற்குப் பழங்களை வாங்கி மீதிப் பணத்தைத் தம்மிடையே சமமாகப் பங்கிட்டனர்.

1. பழங்களை வாங்கிய பின்னர் எஞ்சியிருந்த பணம் யாது?

   .....

2. மீதிப் பணத்தில் ஒருவருக்கு எவ்வளவு கிடைத்தது?

   .....

06. 6 பென்சில்கள் வீதம் உள்ள நான்கு பெட்டிகளும் 8 பென்சில்கள் வீதம் உள்ள மூன்று பெட்டிகளும் உள்ளன. அந்த ஏழு பெட்டிகளிலும் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை யாது?

.....

07. ஒவ்வொன்றும் 25cm நீளமுள்ள 4 உலோகத் துண்டுகள் ஒரு தனித் துண்டாக ஒட்டப்பட்டன. ஒவ்வொரு தடவை ஒட்டும்போதும் ஒவ்வோர் உலோகத் துண்டின் 5cm ஐ ஒன்றன் மீதொன்று வைக்க நேரிட்டது. இறுதியாகக் கிடைக்கும் உலோகத் துண்டின் நீளம் யாது?

.....

www.ikeou.lk

08. ஐந்து நண்பர்கள் தம்மிடமுள்ள பணத்தைச் சமமாக இட்டு ஒன்று ரூபா 30 வீதம் 8 தோடம்பழங்களையும் ஒன்று ரூபா 50 வீதம் 6 அப்பிள் பழங்களையும் வாங்கினர்.

    1. அப்பிள் பழங்களையும் தோடம்பழங்களையும் வாங்கத் தேவைப்பட்ட மொத்தப் பணம் எவ்வளவு?
       .....
    2. ஒவ்வொரு நண்பனும் இட்ட பணம் எவ்வளவு?
       .....

09. ஒரு குறித்த மோட்டார் வாகனத்தை ஒரு லீற்றர் பெற்றோலில் 8 கிலோமீற்றர் தூரம் செலுத்தலாம். ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபா 150.00 எனின், 40 கிலோமீற்றர் செலுத்தத் தேவையான பெற்றோலுக்கான செலவு யாது?
    .....

10. 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரை நான்கு குவளைகளில் சமமாக இடும் போது ஒரு குவளையில் இருக்கும் நீரின் அளவைக் காண்க.
    .....

11. ஒரு பாத்திரத்தில் 2 லீற்றர் 375 மில்லிலீற்றர் குளிர் பானம் உள்ளது. அக்குளிர் பானம் ஐந்து சம போத்தல்களில் நிரப்பப்பட்டது. ஒரு போத்தலில் உள்ள குளிர் பானத்தின் அளவு யாது?
    .....

12. ஒரு பிள்ளை P என்னும் இடத்திலிருந்து 20m கிழக்கே செல்கின்றது. பின்னர் அது அவ்விடத்திலிருந்து 20m தெற்கே சென்று Q என்னும் இடத்தில் நிற்கின்றது. P இற்கு எத்திசையில் Q அமைந்துள்ளது?
    .....

13. ஒரு பாத்திரத்திலுள்ள மண்ணெண்ணெயிலிருந்து 6 லீற்றர் 250 மில்லிலீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 12 லீற்றர் 475 மில்லிலீற்றர் ஆகும். பாத்திரத்திலே முதலில் இருந்த மண்ணெண்ணெயின் கனவளவு யாது?
    .....

14. 12 பென்சில்களிலிருந்து $\frac{3}{4}$ ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?
    .....

15. பரிசளிப்பு விழாவுக்காக 810 புத்தகங்கள் கிடைத்துள்ளன. ஒரு பொதியில் 4 புத்தகங்கள் வீதம் இருக்குமாறு எத்தனை பரிசுப் பொதிகளைச் செய்யலாம்?
    .....

www.ikeou.lk

16. 130 பென்சில்களை 7 பேர்களிடையே சமமாகப் பங்கிடும் போது எஞ்சும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?

    .....

17. ஒரு புத்தகத்தின் விலை ரூபா 40 எனவும் ஒரு பென்சிலின் விலை ரூபா 12 எனவும் கடை ஒன்றின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

    1. கடைக்குச் சென்ற அருணாவுக்கு மூன்று புத்தகங்களையும் ஒரு பென்சிலையும் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?

       .....

    2. அருணா, மூன்று புத்தகங்களையும் ஒரு பென்சிலையும் வாங்கிக்கொண்டு கடை உரிமையாளருக்கு ரூ 50 காசுத்தாள்கள் 3 ஐக் கொடுத்தாராயின், அவருக்குக் கிடைத்த மீதிப் பணம் எவ்வளவு?

       .....

18. 6 kg 500 g சீனியிலிருந்து எத்தனை 250 g சீனிப் பைக்கற்றுகளைத் தயாரிக்கலாம்?

    .....

19. பாத்திரம் ஒன்று கொள்ளும் தேனின் கனவளவு 3 லீற்றர் ஆகும். அப்பாத்திரத்தில் 1 லீற்றர் 800 மில்லிலீற்றர் அளவு தேன் இடப்பட்டுள்ளது.

    1. இப்பாத்திரத்தை நிரப்புவதற்கு இன்னும் தேவைப்படும் தேனின் அளவு லீற்றர், மில்லிலீற்றர் ஆகியவற்றில் தருக.

       .....

    2. பாத்திரத்தில் தற்போது உள்ள தேனை ஒவ்வொன்றும் 150 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்பலாம்?

       .....

20. குறித்த ஒரு கடையில் 1 கிலோகிராம் 750 கிராம் சீனியை வாங்குவதற்கு நிலானி ரூபா 210.00 பணத்தைச் செலுத்தினாள். அப்பணத்தைச் செலுத்துவதற்கு ரூபா 500.00 காசுத்தாளைக் கொடுத்த நிலானிக்கு மீதிப் பணமாக ஒரே வகையான 5 காசுத்தாள்களும் ஒரே வகையான 4 நாணயங்களும் கிடைத்தன.

    1. இக்கடையில் 1 கிலோகிராம் சீனியின் விலை எவ்வளவு?

       .....

    2. நிலானிக்கு மீதிப் பணமாக கிடைத்த,
       ஐந்து காசுத்தாள்களினதும் மொத்தப் பெறுமதி எவ்வளவு?

       .....

       நான்கு நாணயங்களினதும் மொத்தப் பெறுமதி எவ்வளவு?

       .....

www.ikedu.lk

21. 120 பழங்களைக் கொண்ட மாம்பழக் குவியலில் $\frac{3}{8}$ பழுதடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டது. மீதியாக இருந்த நல்ல மாம்பழங்கள் பாமினி, சாலினி, பாத்திமா ஆகிய மூன்று நண்பிகளிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

    1. குவியலில் இருந்த நல்ல மாம்பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
       .....
    2. ஒரு நண்பிக்குக் கிடைத்த மாம்பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
       .....

22. ஒரு வியாபாரி வாங்கிய 256 தேங்காய்களில் $\frac{3}{4}$ ஐ விற்றான். அவன் விற்பனை செய்த தேங்காய்களின் எண்ணிக்கை யாது?
    .....

23. 608 அப்பியாசக் கொப்பிகளை ஒரு பெட்டிக்கு 6 வீதம் பெட்டிகளில் பொதி செய்ய வேண்டியுள்ளது.

    1. ஒரு பெட்டியில் 6 வீதம் பொதி செய்வதற்கு தேவையான பெட்டிகள் எத்தனை?
       .....
    2. அதன் பின்னர் எத்தனைக் கொப்பிகள் மீதியாக இருக்கும்?
       .....

24. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.

பாடசாலை	A	B	C	D
மாணவர் தொகை	2285	2032	890	1318

    1. A பாடசாலை D பாடசாலை ஆகிய இரண்டிலும் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?
       .....
    2. C பாடசாலையை விட B பாடசாலையில் எத்தனை மாணவர்கள் கூடுதலாக உள்ளனர்?
       .....

25. 2 லீற்றர் 500 மில்லிலீற்றர் கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு 500 மில்லிலீற்றர் கொள்ளளவுள்ள பாத்திரமொன்றினால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?
    .....

www.lkedu.lk

26. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	1 kg இன் விலை		அளவு	விலை	
	ரூபா	சதம்		ரூபா	சதம்
சீனி	120	00	500 g	60	00
தேயிலை	850	00	100 g	…….	00
பால் மா	……..	00	250 g	150	00
மொத்தப் பணம்				…….	00

27. பழ வியாபாரி ஒருவர் நான்கு வாரங்களில் விற்பனை செய்த அன்னாசிப்பழங்கள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

வாரம்	அன்னாசிப் பழங்களின் தொகை
முதலாம்	1256
இரண்டாம்	1345
மூன்றாம்	1842
நான்காம்	2480

1. முதலாம் இரண்டாம் வாரங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ள மொத்த அன்னாசிப்பழங்கள் எத்தனை?
   ……
2. மூன்றாம் வாரத்தை விட நான்காம் வாரத்தில் எத்தனை அன்னாசிப்பழங்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளன?
   ……

28. 3 kg 500 g பாசிப்பயற்றை ஒரு பையில் 500 g வீதம் எத்தனை பைகளில் இடலாம்?
……

29. ஒன்றின் விலை ரூபா 35.00 வீதம் 6 அப்பியாசப் புத்தகங்களை வாங்கிக்கொண்டு ரூபா 500.00 நாணயத்தாளொன்றைக் கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?
……

www.lkedu.lk

30. மயூரன் ஓர் இடத்திலிருந்து வடக்குத் திசையில் 5m தூரம் சென்று அவனது இடது கைப்பக்கமாகத் திரும்பி மேலும் 5m சென்றான். அவ்விடத்திலிருந்து தெற்குத் திசையில் 5m சென்றான் எனின், அவன் இப்போது பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து எந்தத் திசையில் உள்ளான்?
.....

31. 436 கேக் துண்டுகள் ஒரு பெட்டியில் நான்கு துண்டுகள் வீதம் பெட்டிகளில் இடப்பட்டன. கேக் துண்டுகள் இடப்பட்ட பெட்டிகள் எத்தனை?
.....

32. 12 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீர் நிரப்பக்கூடிய தொட்டியொன்றில் $\frac{1}{4}$ பகுதி வரை நீர் ஊற்றப்பட்டுள்ளது. அத்தொட்டியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?
.....

33. ஒரு பாடசாலையில் 1046 பெண்பிள்ளைகளும் 938 ஆண் பிள்ளைகளும் உள்ளனர்.

    1. பாடசாலையில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
       .....
    2. இப்பாடசாலையில் உள்ள ஆண்பிள்ளைகளிலும் பார்க்க எத்தனை பெண் பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர்?
       .....

34. 416 இணை 4 இனால் வகுக்கும் போது கிடைக்கும் விடை யாது?
.....

35. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	ஒரு கிலோகிராமின் விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
அரிசி	3kg	95	00	.....	.....
பருப்பு	500g	.....	.....	87	50
மொத்தப் பணம்				372	50

36. ஒரு தாங்கியில் 10 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரும் வேறொரு தாங்கியில் 8 லீற்றர் 600 மில்லிலீற்றர் நீரும் உள்ளன. இரண்டு தாங்கிகளிலும் உள்ள நீரின் அளவுகளிடையே உள்ள வித்தியாசம் யாது?
.....

www.ikedu.lk

37. பை ஒன்றில் 2 kg 350 g அரிசி இருந்தது. அதற்குள் மேலும் 1 kg 750 g அரிசி இடப்படுகின்றது. இப்போது பையிலுள்ள அரிசியின் மொத்த நிறை யாது?

.....

38. நகரம் A இலிருந்து நகரம் B வரையுள்ள தூரம் 5 km 750 m ஆகும். நகரம் B இலிருந்து நகரம் C வரையுள்ள தூரம் 7 km 500 m ஆகும். நகரம் A இலிருந்து நகரம் B இனூடாக நகரம் C வரை உள்ள மொத்தத் தூரம் யாது?

.....

39. பிற்பகல் 2.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கீதா 45 நிமிடத்தில் நூல் நிலையத்திற்குச் சென்றாள். அவள் அங்கு 40 நிமிடங்கள் இருந்தாள்.

    1. கீதா நூல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டாள்?
       .....
    2. அந்நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.
       .....

40. காலை 6.50 இற்குப் பாடசாலைக்கு வந்த முரளி பிற்பகல் 2.15 வரைக்கும் பாடசாலையில் தங்கியிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றான்.

    1. முரளி பாடசாலையிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.
       .....
    2. முரளி பாடசாலையில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தான்?
       .....

41. ஒரு நூலகத்திற்கு வந்து அங்கு 4 மணித்தியாலம் 30 நிமிடத்தைச் செலவிட்ட சங்கர் அங்கிருந்து பி.ப 3.00 இற்குப் புறப்பட்டான்.

    1. சங்கர் புறப்பட்டுச் சென்ற நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.
       .....
    2. சங்கர் நூலகத்திற்கு வந்த நேரம் யாது?
       .....

42. புகையிரத நிலையத்திற்கு 14:20 மணித்தியாலத்திற்கு வரவேண்டிய புகையிரதம் 45 நிமிடங்கள் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கேற்ப புகையிரதம் வரும் நேரம் யாது?

.....

www.ikeu.lk

43. ஒரு பாடசாலையில் விளையாட்டு விழா முற்பகல் ஒன்பது மணி முப்பது நிமிடத்திற்கு ஆரம்பித்தது. அது 4 மணித்தியாலம் 45 நிமிடத்திற்குப் பின்னர் முடிவடைந்தது. விளையாட்டு விழா முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.
……

44. பாடசாலை ஒன்றில் கலை நிகழ்ச்சிகள் 11:30 மணிக்கு ஆரம்பமாகி 14:15 மணிக்கு முடிவடைந்தன. கலை நிகழ்ச்சிகள் எவ்வளவு நேரம் நடைபெற்றன?
……

45. பிற்பகல் 4.30 மணிக்கு புத்தகம் ஒன்றை வாசிக்க ஆரம்பித்த கவிதாவுக்கு அதனை வாசித்து முடிப்பதற்கு 1 மணித்தியாலம் 35 நிமிடங்கள் எடுத்தது. அவள் புத்தகத்தை வாசித்து முடித்த நேரம் இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.
……

46. பிற்பகல் 1.15 இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்ட பாலா பிற்பகல் 2.40 இற்கு நூலகத்தைச் சென்றடைந்தான்.

    1. வீட்டிலிருந்து நூலகத்திற்குச் செல்வதற்குப் பாலாவுக்கு எடுத்த நேரம் மணித்தியாலங்களிலும் நிமிடங்களிலும் எவ்வளவு?
    ……
    2. பாலா நூலகத்தை அடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.
    ……

47. பி.ப. 7.45 இற்குக் கொழும்பிலிருந்து புறப்பட்ட ஒரு பேருந்து வண்டி மறுநாள் மு.ப. 4.15 இற்கு யாழ்ப்பாணத்தை அடைந்தது. பயணத்துக்குச் செலவாகிய மொத்த நேரம் எவ்வளவு?
……

48. பிற்பகல் 3.30 என்பது இருபத்து நான்கு மணிக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.
……

49. 24 மணித்தியாலக் கடிகாரம் 13:30 எனக் காட்டும் போது 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது?
……

50. முற்பகல் 6.50 எனும் நேரத்திலும் 30 நிமிடங்கள் கூடிய நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் முறையை இலக்கங்களில் தருக.
……

www.iredu.lk